# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், நான்காம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 10-ஆம் தேதி தஞ்சாவூரில் தொடங்குகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நான்காம் கட்டமாக தஞ்சாவூரில் பரப்புரையை தொடங்குகிறார்.



## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **10.04.2026 (வெள்ளிக்கிழமை)** | | |
| மாலை 5 மணி | தஞ்சாவூர் (பொதுக்கூட்டம்) | திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை,பேராவூரணி, பாபநாசம், திருவிடைமருதூர், கும்பகோணம் |
| **11.04.2026 (சனிக்கிழமை)** | | |
| மாலை 4 மணி | புதுக்கோட்டை (பொதுக்கூட்டம்) | கந்தர்வக்கோட்டை, விராலிமலை, புதுக்கோட்டை, திருமயம், ஆலங்குடி, அறந்தாங்கி |
| மாலை 7 மணி | திருப்பத்தூர் (பொதுக்கூட்டம்) | காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை, மானாமதுரை |
| **12.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)** | | |
| மாலை 4 மணி | பரமக்குடி (பொதுக்கூட்டம்) | பரமக்குடி, திருவாடானை, ராமநாதபுரம், முதுகுளத்தூர் |
| மாலை 7 மணி | தூத்துக்குடி (பொதுக்கூட்டம்) | விளாத்திகுளம், தூத்துக்குடி, திருச்செந்தூர், திருவைகுண்டம், ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி |

குறிப்பு:

❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 08.04.2026

தலைமைக் கழகம்,
தி.மு.க.





காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் போட்டியிடும் 6 சட்டமன்ற தொகுதி வேட்பாளர்கள் தா.மோ.அன்பரசன், கு.செல்வப்பெருந்தகை, கிருத்திகா தேவி, கார்த்திக் தண்டபாணி, பன்னீர்தாஸ், அனகை முருகேசன் ஆகியோர் காஞ்சிபுரம் செங்கல்பட்டு மறைமாவட்ட ஆயர் நீதிநாதன் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர். அருகில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன், மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், பகுதிச் செயலாளர் இந்திரன் மற்றும் கூட்டனி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் உத்திரமேரூர் தொகுதி

## வேட்பாளர் க.சுந்தர் உத்திரமேரூர் ஒன்றியத்தில் தீவிர வாக்கு சேகரிப்பு!

### ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஏப்.9,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியக் கழகச் செயலாளர் கெ. ஞானசேகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., உத்திரமேரூர் ஒன்றியத்தில் ஊராட்சி வாரியாக நாளை (10.4.2026வெள்ளிக்கிழமை) காலை 7.30 மணி முதல் 8 மணிவரை தொடர்ந்து வாக்கு சேகரிக்கிறார்.

நமது வேட்பாளர் க.சுந்தர், நாளை (9.4.2026) காலை 7.30 மணிக்கு ஆதவப்பாக்கத்தில் வாக்கு சேகரிக்கும் நிகழ்ச்சியைத் தொடங்கி தொடர்ந்து , 8 மணிக்கு காவாம் பயிர், 8.30 மணிக்கு புலிவாய் (வழி) புத்தளி, 9 மணிக்கு கருவேப்பம்பூண்டி, 10 மணிக்கு ஒழுகரை, 10.30 மணிக்கு சிலாம்பாக்கம், 11 மணிக்கு அழிசூர், 11.30 மணிக்கு திணையாம்பூண்டி, 12 மணிக்கு களியாம்பூண்டி, 12.30 மணிக்கு மேல்பாக்கம், 12.50 மணிக்கு அனுமந்தண்டலம், 1.10 மணிக்கு இளநகர், 1.30 மணிக்கு பெருநகரிலும் வாக்குசேகரிக்கிறார்.

அதனைத் தொடர்ந்து வேட்பாளர் க.சுந்தர் மாலை 4 மணிக்கு பெருநகர், 5 மணிக்கு விசூர், 5.30 மணிக்கு மனாம்பதி, 6 மணிக்கு மா.கண்டிகை, 6.30 மணிக்கு மேல்தண்டரை, இரவு 7 மணிக்கு இராவத்தநல்லூர், 7.30 மணிக்கு காரணை, 8 மணிக்கு அமையப்பநல்லூரிலும் பொதுமக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரிக்கிறார்.

இந் நிகழ்ச்சியில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகளான காங்கிரஸ் கட்சி, திராவிடர் கழகம், விடுதலை சிறுத்தைகள் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி , மறுமலர்ச்சி திராவிட கழகம், மக்கள் நீதி மையம் மற்றும் கூட்டணி கட்சிகளின் மாநில,மாவட்ட, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

எனவே கூட்டணி கட்சிகளின் அனைத்து நிர்வாகிகள், வாக்காளர்களுக்கு முறையாக தகவல் தெரிவித்து வாக்கு சேகரிக்கும் சுற்றுப் பயணத்தை சிறப்பாக நடத்தித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஒன்றியச் செயலாளர் கே.ஞானசேகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.





திரு.வி.க நகர் சட்டமன்றத் தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் வழக்கறிஞர் கே.எஸ். இரவிச்சந்திரனை ஆதரித்து, திரு.வி.க நகர் தெற்கு பகுதி வட்டம் 73 (அ) உட்பட்ட பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பு நடைபெற்றது. திரு.வி.க நகர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளரும் மேயருமான பிரியா ராஜன், தாயகம் கவி எம்.எல்.ஏ, பகுதிச் செயலாளர் சாமிக்கண்ணு, பகுதித் துணைச் செயலாளர் ராஜன், மாமன்ற உறுப்பினர் அம்பேத் வளவன், மற்றும் வட்டச் செயலாளர் பொல்லு ஏ.டி. சுரேஷ்குமார் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சித் தோழர்கள், ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.